From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No.17/2013

Deposition of witness for: PW - 11

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Father/Husband Name | : அழகுமலை |
| Age | : | Calling | : |
| Date | : 02.02.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 02 day of 02.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 02.03.2012-ம் தேதி 13.00 மணிக்கு மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேலூர், கொங்கம்பட்டியை சேர்ந்த அய்யனார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு மேலூர் காவல்நிலைய குற்ற எண்.174/2012, பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன் பின்னர் காவல் ஆய்வாளர் திரு.மாடசாமி என்பவர் வெளி அலுவலில் இருந்ததால் அவரின் உத்தரவின்பேரில் நான் வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வகுமார், முத்துக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றைய தினமே 14.00 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சவகிடங்கில் இருந்த விபத்தில் இறந்த சுரேஷ் என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 14.00 மணியிலிருந்து 15.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் தலைமை காவலர் பழனியப்பன் என்பவர் மூலம் இறந்துபோன பிரேதத்தை பிரேத கூராய்வு மேற்கொள்ள வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தேன். மேற்படி தலைமை காவலர் பழனியப்பன் பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத கூராய்வு முடியும் வரை உதவியாக இருந்து பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

பின்பு சாட்சிகள் அய்யணன், குணசேகரன், சிவலிங்கம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் தொடர் புலன் விசாரணைக்கு வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளர் திரு.மாடசாமி என்பவரிடம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி ஆஜர்**</u>

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

புகார் மனுவை பெற்று ஆரம்பகட்ட விசாரணை ஏதும் செய்தேனா என்றால் இல்லை. புகார் கொடுத்த அய்யணன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் கொங்கம்பட்டியை சேர்ந்தவர். அவர் இறந்துபோனவரின் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அப்புகார்தாரர் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். புகாரில் புகார்தாரருக்கு 02.03.2012-ம் தேதி பகல் 12.15 மணிக்கு தனக்கு விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவில் யூகோ வங்கியின் எதிர்புறத்தில் விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் விபத்தை நேரடியாக பார்த்ததாக எந்த சாட்சியும் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் புகார்தாரர் தகவல் தெரிந்து சம்பவ இடம் சென்றதாக சொல்லியுள்ளார். யார் தகவல் சொல்லி அங்கு சென்றார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். யார் சொன்ன தகவலின் பேரில் தான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. புகார் மனுவில் விபத்தை குறித்து தான் விசாரித்ததாக கூறியுள்ளார். ஆனால் எந்த நபரிடம் விசாரித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் என்னிடம் புகார் கொடுத்த போது பகல் 1.00 மணி என்றால் சரிதான். இவ்வழக்கின் நான் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் நான் 1.00 மணிக்கு பார்வை மகஜர் தயார் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக இறந்தவரின் ஊர்காரர்களை விசாரித்துள்ளேன். விபத்து நடந்த இடத்தில் இருந்த கடைக்காரர்களை சாட்சியாக நான் சேர்க்கவில்லை என்றால் கடைக்காரர்கள் அங்கு இல்லாததால் அவர்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை. இவ்வழக்கில் நான் விசாரித்த குணசேகரன், சிவலிங்கம் இருவரும் அங்கு விபத்தின் போது இல்லை என்றால் சரியல்ல. விபத்தின் போது அவர்கள் அங்கு இருந்ததால் தான் நான் அவர்களை விசாரித்தேன். கண்ணுற்ற சாட்சியான சிவலிங்கம் அட்டப்பட்டி, சமத்துவபுரத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர் எனது விசாரணையில் அவர் விபத்தின்போது கோகுலம் டீ கடையில் தான் நின்றுகொண்டிருந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் கோகுலம் டீ கடை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான குணசேகரன் மற்றும் சிவலிங்கம் இருவரும் விபத்தை நேரடியாக

பார்த்ததாக எனது விசாரணையில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் நேரடியாக பார்த்தேன் என்ற வார்த்தையை குறிப்பிடவில்லை என்றாலும், தான் நேரடியாக பார்த்த விபரத்தை தான் என்னிடம் சொன்னார். மேற்கூறிய இருவரும் எதற்காக விபத்து நடந்த இடத்திற்கு அந்த சமயத்தில் வந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் விபத்தை குறித்து மட்டும் தான் சொன்னார்கள். அவர்கள் எதற்கு வந்தார்கள் என்று சொல்லவில்லை.

மாதிரி வரைபடத்தில் உள்ள சூர்யா வாட்டர் சர்வீஸ் என்று ஏதேனும் இடத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விபத்து நடந்த இடத்தில் வாகனத்தில் சேதம்பட்ட பாகங்கள் ஏதேனும் இருந்ததாகவும், அதை நான் கைப்பற்றியதாகவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.